**21.07.2026**

**O.S.No. 115/2024**

**வா.சா. 1: ராமசாமி**

**<u>9 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) என் பட்டா நிலத்தில் மண் கொட்டி ஆக்கிரமிப்பு செய்கிறார்கள் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் நிலத்தின் சர்வே எண். 195/2E ஆகும். 1 ஏக்கர் 15 செண்ட் உள்ளது. மேற்படி நிலத்தில் தான் மண் கொட்டி ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தார்கள் என்றால் சரிதான். மேற்படி நிலம் எனக்கு பாகம் மூலம் பாத்தியப்பட்டது. எனக்கும் என் அண்ணனுக்கும் பாகம் ஏற்பட்டது. எனக்கு அ- அட்டவனை படி 1 ஏக்கர் 15 செண்ட் நிலம் பாத்தியப்பட்டது. அதற்கு முன்பாக அந்த சொத்து என் அப்பாவிடம் இருந்தது. அதை என் அப்பா கிரயம் வாங்கினார். (வாசாஆ.1) அந்த கிரய பத்திரத்தை படித்து பார்த்துள்ளேன். அந்த கிரய பத்திரப்படி என் அப்பா 1 ஏக்கர் நிலம் தான் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். என் அப்பா கிரயம் வாங்கும்போது 195/2 ல் 2 ஏக்கர் மொத்தம் இருந்தது. ஒரு ஏக்கர் தான் கிரயம் பெற்றுள்ளார். மீதி ஒரு ஏக்கர் பிரதிவாதிகளிடம் தான் உள்ளது. பாக பிரிவினை பத்திரத்தில் தான் ஒரு ஏக்கர் 15 செண்ட் பாக பிரிவினையின் கீழ் எழுதப்பட்டுள்ளது.

2) நானோ, எனது சகோதரரோ, என் அப்பாவோ சர்வே எண். 195/2 ல் அந்த ஒரு ஏக்கரை தவிற வேறு சொத்து எதுவும் கிரயம் பெற்றுள்ளோனா என்றால் இல்லை. மேற்படி பாக பிரிவினை பத்திரத்தில் கிரயம் பெற்ற 1 ஏக்கரை விட அதிகாமாக மேற்படி சர்வே எண். 195/2 ல் 1 ஏக்கர் 15 செண்ட் உள்ளதாக தெரிவித்து என் அப்பாவும் நானும், என் சகோதரரும் பொய்யாக பாக பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. 15 செண்ட் நிலத்தை சேர்த்து எழுதியதால் தான் இந்த பாக பிரிவினை பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பாக பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள பொய்யான விஸ்தீரணத்தின் அடிப்படையில் வருவாய் துறையை கைக்குள் போட்டுக்கொண்டு பட்டா, சிட்டா, அடங்கல் ஆகிய ஆவணங்களை அதிகமான விஸ்தீரணமான 1.15 ஏக்கர் உள்ளதாக பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி மேற்படி சொத்தின் விஸ்தீரணத்தை கண்டறிய வட்டாட்சியருக்கு படி கட்டி நில அளவையர் நிலத்தை அளக்க வந்தார்கள்.

வழக்கு நிலுவையில் இருப்பதால் அளக்க முடியாது என்று சொல்லி தெரிவித்துவிட்டேன். பிரதிவாதிக்கு உண்டான சொத்தின் சர்வே எண்ணில் அவருடைய ஒரு ஏக்கர் நிலத்திற்கு பதிலாக குறைவாக உள்ளதாக கூறி வருவாய் கோட்டாட்சியரிடம் பிரதிவாதி மனு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் விசாரணை செய்தார்கள் என்று சொன்னால் யாரும் விசாரிக்கவில்லை.

3) மேற்படி அதிகமான சொத்தை பாக பிதிவினை பத்திரத்தின் மூலம் எழுதிகொண்டேன் என்றும் அதை சரிசெய்ய தான் பிரதிவாதிகள் வருவாய் துறையில் மனு கொடுத்து நடவடிக்கை எடுத்தார்கள் என்றும் அதில் இருந்து தப்பிப்பதற்காக தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கு மேற்படி 15 செண்ட் நிலத்தில் எவ்வித உரிமையும் அனுபவமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கில் நிலத்தை பார்வையிட நீதிமன்ற ஆணையம் நிர்ணயம் செய்து பார்வையிட்டோம் என்றால் சரிதான். நிலத்தை அளப்பதற்கு நான் மனு தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்தில் உள்ள பௌதீக நிலைகளை ஆராய மட்டுமே ஆணை நியமனம் மனு செய்தேன். என்னுடைய நிலம் எனக்கு இருந்தால் போதும். மற்றவர் நிலம் எனக்கு தேவை இல்லை. மேற்படி விவரத்தை தெரிவிக்க பிரதிவாதிக்கு மீண்டும் ஆணையர் நியமனம் செய்து என்னுடைய சொத்தை அளப்பதற்கு ஆட்சேபணை இல்லை என்று சொன்னால் என்னுடைய நிலத்தை அளக்க அவசியம் இல்லை. பிரதிவாதிகள் நிலத்தை தான் அளக்க வேண்டும். மேற்படி 2 ஏக்கர் நிலத்தையும் அளக்க படி கட்டி ஆட்சேபனை உள்ளதா என்றால் அவர் நிலத்தை மட்டும் அளக்க வேண்டும்.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.07.21 17:24:35 +0530

**Subordinate Judge, Attur.**